Pauper O.P.No.117/2024

PW.1

11-02-2026 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு ஐந்து பெண் மக்கள், ஒரு ஆண் மகன் உள்ளார்கள். முதல் மகள் வசந்தகுமாரி சிங்காநல்லூரில் இருக்கிறார். 2 வது மகள் விஜயகுமாரி நீலிக்கோணாம்பாளையத்தில் இருக்கிறார். 3 ஆம் மகள் ஈஸ்வரி, வெள்ளலூரில் குடியிருக்கிறார். 4 வது மகள் கிருஷ்ணவேணி வெள்ளலூரில் இருக்கிறார். 5 வது மகள் தமிழ்செல்வி அன்னூரில் வாடகை வீட்டில் குடியிருக்கிறார். எனது மகன் அன்னூரில் சொந்த வீட்டில் வசிக்கிறார். நான் வெள்ளலூர் கிராமத்தில்தான் குடியிருந்து வருகிறேன். எனது 3 வது மகளின் மருமகளோடுதான் நான் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் 2005 ல் தவறிவிட்டார். எனது கணவர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணி செய்து வந்தார். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவியாளராக சேர்ந்து நிரந்தர பணி அமர்த்தப்பட்டு பின்னர் பணி ஓய்வு பெற்றார். அவர் 1992 ல் ஓய்வு பெற்றிருப்பார். நான் மனைவி என்ற முறையில் தற்பொழுது ஓய்வூதியம் பெற்று வருகிறேன் என்று சொன்னால் சரிதான். தற்பொழுது மாதம் ரூ.13,000/- ஓய்வூதியம் பெற்று வருகிறேன். ஓய்வூதிய புத்தகத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. எனக்கு மாதம் ரூ.25,000/-த்திற்கு மேல் வருமானம் வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

நானும் எனது மகனும் ஒன்றாகத்தான் இருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் எனது கணவர் இறந்த ஒரு வருடத்திலேயே என்னை ஒதுக்கி வைத்து விட்டார். எனது மகனின் தூண்டுதலின்பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நானாகத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றக் கட்டணத்தை செலுத்துவதற்கு எனக்கு வசதியுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது மகனுக்கு எதிராக வருவாய் கோட்டாட்சியரிடம் நான் மனு கொடுத்துள்ளேன் என்று கூறுவதற்கு ஆதாரமாக நான் ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு போதிய வருமானம் இருப்பதால் எனது மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எனது முதல் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில்தான் குடியிருந்து வருகிறேன். நான் வெள்ளலூர் கிராமத்தில் குடியிருக்கவில்லை என்றும், எனது மகள் வயிற்று பேத்தியுடன் வேறு ஒரு இடத்தில் குடியிருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மாதம் ரூ.13,000/- ஓய்வூதியமாக பெற்று வருகிறேன். நாங்கள் குடியிருக்கும் வீட்டில் அடிப்படை வசதிகள் அனைத்தும் உள்ளது. ஆனால் அவைகள் அனைத்தும் எனது பேரனுக்கு சொந்தமானவைகள். எனது மனுவில் மொத்தம் ரூ.600/- மதிப்புள்ள பொருட்கள் மட்டும்தான் உள்ளதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

2006 லிருந்து நான் ஓய்வூதியம் பெற்று வருகிறேன். ஆனால் எனது மாத வருமானத்தை மறைத்து ரூ.600/- மதிப்புள்ள சொத்துக்கள் மட்டும்தான் உள்ளதாக வழக்கிற்காக தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மாத வருமானம் ரூ.1000/-க்கு மேல் இருந்தால் வறியவராக கருத இயலாது என்று சொன்னால், அதை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு மாத ஓய்வூதியமாக ரூ.13,000/- வருமானம் வருவதால் இந்த மனு செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

sd/ தங்கம்,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.